# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் திட்டங்கள் குறித்து முதலமைச்சர் கலைஞர் ஆய்வு!

## ஏழை எளிய மக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் திட்டப்பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்கு

## முதலமைச்சர் கலைஞர் அறிவுரை!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து இன்று (1.10.2010) ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. வி.கு. சுப்புராஜ், நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கே. சண்முகம், முதலமைச்சரின் செயலாளர் (கண்காணிப்புப் பிரிவு) திரு. கா. அலாவுதீன், மாநில நலவாழ்வுச் சங்க இயக்குநர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை இயக்குநர் திரு இரமேஷ் குமார் கண்ணா, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் எஸ். விஜயகுமார், மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை இயக்குநர் டாக்டர் பொற்கை பாண்டியன், மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை இயக்குநர் டாக்டர் என். ராஜா, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் கனகசபை மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் மருத்துவ முகாம்கள் குறித்து ஆய்வு செய்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மருத்துவ முகாம்களை அதிக அளவில் நடத்தி, கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் பலரும் பயனடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே மேலும் வளர்த்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி உரிய காலத்தில் பயனாளிகளுக்குக் கிடைக்க களப்பணியாளர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும்; போலி மற்றும் காலாவதி மருந்துகளின் விற்பனை அறவே ஒழிக்கப்பட, இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும்;

இதேபோல் உணவுக் கலப்படத்தையும் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், கலப்பட உணவுகளைக் கண்டுபிடித்து அவற்றை அழித்து மக்கள் பாதிக்கப்படாத வகையில் காத்திட விழிப்புடன் செயல்பட வேண்டுமென்றும்; அரசு மருத்துவமனைகளில் தேவைப்படும் மருந்துகள் போதிய அளவில் இருப்பில் உள்ளனவா என்பதை அடிக்கடிக் கண்காணித்து, மருந்து இல்லை என்ற நிலை ஏற்படாத வகையில், இருப்பினை உறுதி செய்திட வேண்டுமென்றும்; மருத்துவமனைகளுக்கு அரசு அனுமதித்த புதிய மருத்துவச் சாதனங்களை உடனடியாகக் கொள்முதல் செய்து அவற்றினை மக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டுவரவேண்டுமென்றும்; அரசு மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படும் மருத்துவர் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியிடங்கள்

அனைத்தையும் உடனுக்குடன் நிரப்பி, தரமான மருத்துவ சிகிச்சை மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டுமென்றும்;

நகராட்சிப் பகுதிகளில் சுகாதார வசதிகள் போதிய அளவில் கிடைப்பதை உறுதி செய்திட நகர சுகாதார மையங்களைத் தாமதமின்றி உடனடியாக ஏற்படுத்தி, சுகாதார வசதிகள் நகரத்தில் உள்ள குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கும் கிடைக்கச் செய்திட வேண்டுமென்றும், இதில் எவ்விதத்திலும் சுணக்கம் ஏற்படக் கூடாதென்றும் முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அவசரகால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டத்தினை, தேவைப்படும் இடங்களுக்கு விரிவுபடுத்திடும் வகையில் கூடுதலாக 200 ஊர்திகளை விரைந்து கொள்முதல் செய்து, இத்திட்டப் பணிகள் மேலும் செம்மையாக நடைபெற ஆவன செய்திட வேண்டுமென்றும்; பன்றிக் காய்ச்சல் காரணமாக உயிரிழப்புகள் ஏற்படுவதை முற்றிலும் தடுத்திட உரிய தடுப்பு நடவடிக்கைகளை மாநிலம் முழுவதிலும் விரைந்து மேற்கொள்ளுமாறும்; பள்ளிச் சிறார் கண்ணொளி காப்போம் திட்டம் கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டதைப் போன்று இந்த ஆண்டிலும் செம்மையாகச் செயல்படுத்தி, தேவைப்படும் மாணவ மாணவியர்க்குக் கண் கண்ணாடிகளை உடனடியாக வழங்கிட வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்;

மருத்துவமனைகளிலுள்ள அனைத்து மருத்துவக் கருவிகளும் நன்றாக இயங்குவதற்காகவும், பழுதடையும் கருவிகளை உடனடியாகச் சீரமைப்பதற்கும் சிறப்புக் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

மாநில அளவில் சிறப்பு ஆய்வுக் குழு ஒன்றை அமைத்து, அனைத்து மருத்துவமனைகளையும் அவ்வப்போது ஆய்வுகள் செய்து, சேவைகள் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்திட துறை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆணையிட்டார்.

மலேரியா, டெங்கு போன்ற காய்ச்சலைக் கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சைகள் அளிக்கவும், துறை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பதுடன், கொசு ஒழிப்புக்குச் சிறப்பு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

இந்த ஆண்டிற்கானத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இதுவரை 40 விழுக்காட்டிற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காக தமிழக அரசுக்குக் கிடைத்துள்ள “ஈ – இந்தியா 2010” என்ற விருதினையும், பொதுமக்களுக்கு நன்கு சேவை செய்து வருவதற்காக, கிண்டி, கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு இந்திய வர்த்தகத் தொழில் கூட்டமைப்பின் (FICCI) 2010ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள விருதினையும் பார்வையிட்டு இத்தகைய விருதுகளைத் தொடர்ந்து பெறும் வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் திட்டப் பணிகள் அனைத்தையும் மேலும் சிறப்பாக நிறைவேற்றித் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திடுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

• * *

<u>வெளியீடு:–</u>இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9